(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 376/2023 அ.சா.7

Name : **திரு.** முருகன்

Father's name :

Village :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.08.2026.

**( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது கருங்காலக்குடியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. நான் பார்த்தது இல்லை. என்னிடம் சாட்சி எண்.8 பனையம்மாள் வந்து அய்யா வயல் அருகில் உள்ள பள்ளத்தில் தண்ணிக்குள் ஒரு ஆள் கிடக்கிறார் என்று சொன்னார். நான் அந்த விவரத்தை மாமா செல்வத்திடம் சொன்னேன். எனக்கு இந்த வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 22.05.2022ம் தேதி மதியம் 12.30 மணியளவில் என் பக்கத்து வீட்டில் குடியிருக்கும் எனது அத்தை பனையம்மாள் நான் சமைத்து கொண்டிருக்கும்போது என்னிடம் வந்து நமது வீட்டிற்கு வடக்காக உள்ள கருங்காலக்குடி மொல்லமலை சோலமலை வயல் அருகில் ஒருவனை போட்டு ஆறு பேர் அடித்து கொண்டிருக்கிறார்கள் என்றும் அதை போய்

பார் என்று சொன்னதாகவும், அதனை நான் போய் பார்க்கும்போது அதே ஊரைச் சேர்ந்த 1வது எதிரி மற்றும் அடையாளம் சொல்லக்கூடிய 5 பேர்கள் இறந்த பெரியகருப்பனை கீழே போட்டு மிதித்து கொண்டிருந்தார்கள் என்றும், அதனை தடுக்க போன என்னை ஒழுங்காக போய்விடு இல்லையென்றால் உன்னையும் கொன்றுவிடுவோம் என்று மிரட்டியதாகவும் நான் பயந்து போய் வீட்டிற்கு வந்தவுடன் செல்வத்திற்கு போன் போட்டு சொன்னதாகவும், பெரியகருப்பன் என்பவர் இறந்துகிடக்கிறான் என்று போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :– இல்லை</u>**

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

Sd/- முருகன்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.08.10 06:17:48 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.